முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

## சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 24 திகதி முதல் சோபகிருது வருடம் மார்கழி மாதம் 01 திகதி வரை (10.12.2023 ஞாயிறு முதல் 17.12.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மாதரும பலமிக்க அரங்கா
   மண்ணுலகில் தரும ஞான
   மாதவசிகள் ஆளுமை நிகழ்ந்திட
   மகாஅற்புதம் புரிகின்ற தேசிகா
2. தேசிகனே உன்பெருமை கூறி
   தெரிவிப்பேன் அகத்திய மகரிஷியும்
   ஆசிபட அரங்கன் நீ கேட்க
   அருளுவேன் இந்தியா தமிழகம் தன்னில்
3. தன்னிலே சோபகிருது தேள்திங்கள் அறுநான்கு திகதிமேல்
   தனுர் திங்கள் ஏக திகதி வரை
   இன்னாட்களில் நடக்கும் வார நிகழ்வாக
   எதிர்கால பலன்குறித்த ஆசிதனை உரைப்பேன்
4. உரைக்கவே கறைபடா தலைமை
   உயர் அதிகாரிகள் தன்னை
   வருங்காலம் அமைக்கும் வண்ணம்
   வள்ளல் தன்மை பரவி வருக
5. வருகவே இனியும் ஊழல் வழி
   வளர்க்கின்ற செயல் முறையை
   வருமுலகில் மாற்றிக் கொண்டு
   வஞ்சகம் களவிலா வண்ணம்
6. வண்ணமுடன் சேவைபட இறங்கி
   வாழும் காலமே புண்ணிய வழி
   எண்ணம் கொண்டு இயங்கிட
   இழப்பின்றி தலைமையும் அதிகாரிகளும்

7. அதிகாரிகளும் மீள நேரும்
ஆபத்தான களவு வழியை
சதிபட தொடர்ந்தால் இனி
சகலருக்கும் நீதியின் பிடியாக
8. பிடியாக வேலவனும் இறங்கி
பெருநட்டம் அவமதிப்புமாக
நாடியே ஆஸ்தி பொன்பொருள்
நற்பேரும் இழக்க நேருமப்பா
9. அப்பனே மாற்றம் குறித்தே
ஆன்மீக ஞான அமைப்புகளும்
ஒப்பு கொண்டு அரசியல் களம்
ஓதிடுவேன் காண இருக்க
10. இருக்கவே அரங்க ஞானி போல
இன்னும் பல சக்திகள் இணைந்து
கருத்தாக இந்தியா தமிழகத்தினை
காப்பதும் கடைத்தேற்றுவதும் உறுதிஉறுதி
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 24ம் நாள் 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 01ம் நாள் 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

எல்லையில்லாது தர்மங்களை செய்து மாதருமப் பலனை பெற்று தர்மத்தின் காவலனாக உள்ள அரங்க மகா தேசிகரே இவ்வுலகினை தரும ஞான மகா தவசிகள் ஆட்சி புரிந்திடவே உலகெங்கும் அற்புதங்களை நிகழ்த்தும் ஞானதேசிகனே! உமது பெருமைகளை உலகறியக் கூறியே அகத்திய மகரிஷி யானும் அரங்கா தாம் உலகின் எதிர்காலம் குறித்து கேட்கவே அகத்திய மகரிஷி யானும் சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 24ம் நாள் 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 01ம் நாள் 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இனி வரும் காலங்களிலே உலகினில் கறைபடா தலைமைகளும், உயர் அதிகாரிகளும் நாட்டினில் உருவாக்கும் வகையிலே உலகமெங்கும் தான தருமங்கள் பெருகி வருகின்றதப்பா. ஆதலினாலே இனிமேலாகினும் ஊழல் மூலம் சுய வளர்ச்சியை அடையும் செயல்பாடுகளை இனி வரும் காலத்திலே அவரவரும் மாற்றிக் கொண்டு வஞ்சனைகளை அகற்றி களவு செயல்களை அகற்றி தன்னலமற்று சேவை மனப்பான்மையுடன் நடந்து அவரவரும் வாழும் காலத்திலேயே புண்ணிய வழிகளை நாடி செயல்பட்டு வரவர எந்தவித இழப்பும் இல்லாமல் தவறான வழி செல்லும் சில தலைமைகளும் அதிகாரிகளும் பாவத்திலிருந்து மீண்டு நல்வழி செல்ல நேருமப்பா.

அவ்வாறு இல்லாமல் பாவபுண்ணியங்கள் மீது நம்பிக்கை இல்லாமல் களவிலும் தவறான வழிகளிலும் தொடர்ந்து சென்றிட்டால் அவர்கள் வரும் காலங்களில் நீதியின் பிடியில் அகப்பட்டு முருகப்பெருமானின் பார்வைக்கு உள்ளாகி பெரும் நஷ்டங்களை அடைவர் அவமதிப்பை அடைவார்கள் அவர்கள் தவறான வழியில் சேர்த்திட்ட ஆஸ்தியை இழப்பர் பொன் பொருளையும் இழந்து அவர்கள் இது வரை சேர்த்த நற்பேரையும் இழக்க நேரும்.

உலகினில் நல்ல மாற்றங்களை உருவாக்கவே பல ஆன்மீக ஞான அமைப்புகளும் உறுதிபட அரசியல் களம் இறங்கி இருப்பதினாலே தர்மத்தின் சக்திகள் ஒன்று கூடி இந்தியாவையும் தமிழகத்தையும் இனி வரும் காலங்களிலே காப்பது உறுதியப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–